தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

17.11.2012 A.M

## நெல் பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

திருவாடானை தாலுகா முழுவதும், சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர் நன்கு வளர்ந்துள்ள நிலையில் பூச்சி நோய் தாக்குதல் தென்படுவதால், அதனைக் கட்டுபடுத்துவது பற்றி வேளாண் உதவி இயக்குநர் கமாலுதீன் யோசனை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் இரண்டாவது நெல் களஞ்சியம் என அழைக்கபடும் திருவாடானை தாலுகாவில், சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நெல் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு வந்தனர். கடந்த சில நாள்களுக்கு முன் தொடர் மழை காரணமாக, பயிர்கள் நன்கு வளர்ந்துள்ள நிலையில் தற்போது பூச்சி நோய்த் தாக்குதல் தென்படுகிறது அதனை எவ்வாறு கட்டுபடுத்துவது என வேளாண் உதவி இயக்குநர் கமாலுதீன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

இலைச் சுருட்டுப் புழு: ஆரஞ்சு கலந்த பழுப்பு நிறத்தில் வண்ணத்துப் பூச்சி வயல்களில் தென்படும். தாய் அந்துப் பூச்சி நெல் தோகையின் அடிப்பாகத்தில் நடு நரம்புக்கு அருகில் தனித்தனியே சுமார் 300 முட்டைகள் வரை இடும். 4 முதல் 6 தினங்களில் முட்டையிலிருந்து புழு வெளிவந்து நெற்யிரின் தோகையை நீளவாக்கிலும் குறுக்கும் மடக்கி அதில் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். இதனால், தோகை வெளுத்து பின் காய்ந்து விடும். கதிர் வரும் சமயத்தில் இதன் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனால் நெல் மணிகள் பாதிப்பு ஏற்படும்.

நோய் கட்டுப்படுத்தும் முறை: சிபாரிசுகளுக்கு மேல் தழைச்சத்து உரங்களை இடுவதால் இப்பூச்சி தாக்குதல் பெருகும்.

எனவே, இலை சுருட்டு புழு தாக்கிய வயல்களில் பூச்சியை கட்டுப்படுத்திய பின் தழைச்சத்து இடுவது நல்லது.

இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் (வேம்பு மருந்து) 1000 மில்லி, மோனோகுரோடாபாஸ் 500 மிலி, குளோரிபைரிபாஸ் 500 மில்லி இதில் ஏதாவது ஒரு மருந்தை கைத்தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரிலும் விசைத் தெளிப்பானாக இருந்தால் 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

கூண்டு புழு: தாய் அந்துப் பூச்சி வெள்ளை நிறத்தில் சிறியதாக இருக்கும். இதன் முட்டையில் இருந்து வெளி வரும் புழுக்கள் பயிரின் இலைகளை வெட்டியும், சுரண்டியும் சேதம் ஏற்படுத்தும்.

இலைகளை வெட்டி நீரில் விழுந்து பின் மீண்டும் பயிரில் ஏறி இலைகளை வெட்டும்.

கட்டுப்படுத்தும் முறை: கூண்டுப் புழு தாக்கிய வயல்களில் 2 லிட்டர் மண்ணெண்ணையை மணலில் கலந்து வயலில் வீச வேண்டும். இதனால் நீரில் மிதக்கும் புழுக்கள் அழிக்கப்பட்டு விடும்,அதன்பின் இலைச் சுருட்டு புழுவுக்கு வழங்கப்பட்ட சிபாரிசுப்படி பூச்சி மருந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

தேவையான அளவு மருந்துகள் 50 சதம் மானியத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் சரியான தருணத்தில் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்திடவும் சந்தேகங்களுக்கு அந்த அந்த வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என வேளாண் அதிகாரி கேட்டுக் கொண்டார்.

## சாத்தூர் பகுதியில் அதலைக் காய்கள் அமோக விளைச்சல்

சர்க்கரை நோயாளிகள் முதல் அனைத்து தரப்பினரும் விரும்பி உண்ணும், மருத்துவ குணம் கொண்ட அதலைக்காய் சாத்தூர் பகுதியில் முன்கூட்டியே விளைந்துள்ளதால் இப்பகுதி அதலைக்காய் சுற்று வட்டார பகுதியில் மட்டுமின்றி வெளி மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதியான கலிங்கபட்டி, வண்ணிமடை, போத்திரெட்டிபட்டி, ஓடைப்பட்டி, கொல்லபட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கரிசல்காட்டு பகுதியில் மழை காலங்களில் அதலைசெடிகள் முளைத்து ஏராளமாக காணப்படுகிறது. இந்த செடிகளில் அதிக அளவில் அதலைக்காய்கள் விளைந்துள்ளன. இந்த அதலைக்காய் சர்க்கரை நோய், மஞ்சள்காமாலை உள்ளிட்ட பல்வேறு நோய்களை குணப்படுத்தும் தன்மையுடன் விளங்குறது.

சாத்தூர் பகுதியில் விளையும் அதலைகாய்க்கு சுற்று வட்டார பகுதிகளில் தனி மவுசு உண்டு. இங்கு விளையும் அதலைக்காய்கள் திருச்சி, மதுரை, தேனி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. பொதுவாக இக்காயினை உடனடியாக சமைத்துவிட வேண்டும், இல்லாவிட்டால் தன்மையும் ருசியும் மாறி அது தானகவே முளைக்கத் துவங்கிவிடும். இதை தனியாக விவசாயம் செய்ய முடியாது. தானாகவே காட்டில் வளரும் தன்மை கொண்டது.

இதுகுறித்து மருத்துவர் வெங்கடேஷ் கூறுகையில், அதலைக்காய்,பாகற்காய்க்கு இணையான மருத்துவ குணம் கொண்டது. இது சர்க்கரைநோய், மஞ்சள்காமாலை நோய்களை கட்டுப்படுத்தும் தன்மையுடையது. கசப்பு தன்மை இருந்தாலும் ருசி மிகுந்தது என்றார்.

## உணவுக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் முறை : பேரூராட்சிகள் இயக்குனர் ஆய்வு

மாமல்லபுரத்தில் உணவுக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் முறை குறித்து பேரூராட்சிகள் இயக்குனர் டி.பி.ராஜேஷ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

÷மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள புதிய சிற்பக்கலை கல்லூரி எதிரில் பேரூராட்சி சார்பில் திடக்கழிவு மையம் செயல்பட்டு வருகிறது. மாமல்லபுரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் இங்கு கொண்டு வந்து தரம் பிரிக்கப்பட்டு இயற்கை எரிவாயு, உரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது இம்மையத்தில் உணவுக் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தை மாமல்லபுரம் தெருக்களில் உள்ள சோடியம் விளக்குகளுக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாமல்லபுரத்திற்கு வந்த தமிழக பேரூராட்சிகள் இயக்குனர் டி.பி.ராஜேஷ் திடக்கழிவு மேலாண்மை மையத்தைப் பார்வையிட்டார். மேலும் சோடியம் விளக்குகளை எரிய வைப்பதற்காக எந்திரம் மூலம் உணவுக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் முறை குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆய்வு மேற்கொண்டார். பேரூராட்சிகள் உதவி இயக்குனர் க.ராஜேந்திரன், மாமல்லபுரம் பேரூராட்சித் தலைவர் எம்.கோதண்டபாணி, துணைத் தலைவர் பொ.தேவேந்திரன், செயல் அலுவர் அ.சேவியர் அமல்தாஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விற்பனைக் கூட களத்தில் நெல் உலர்த்த மூட்டைக்கு ரூ.20 கட்டாய வசூல் : விவசாயிகள் புகார்

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள உலர்களத்தில் நெல் உலர்த்த மூட்டைக்கு ரூ.20 கட்டாய வசூல் செய்யப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

÷விழுப்பும் மாவட்டதில் நெல்லுக்கு தனிப்பெருமை வாயந்த இடமாக விளங்கி வருகிறது செஞ்சி. இப்பகுதியில் விளைந்த நெல்லுக்குத் தமிழகம் முழுவதும் உள்ள வியாரிகளிடம் நல்ல வரவேற்பு உண்டு.

÷நெல் அறுவடை நாள்களில் ஒரு நாளைக்கு 15 ஆயிரம் நெல் மூட்டைகள் வரை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர்.

தற்போகு பொன்னி நெல் மூட்டை ரூ,1700-ம் குண்டு நெல் மூட்டை 1300-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

÷மேலும் மணிலா, கேழ்வரகு, கம்பு, உளுந்து உள்ளிட்ட தானியங்கள் மிக அதிக அளவில் விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர். விவசாயிகளுக்கென்று தனியாக நெல் உலர்த்தும் களம் செஞ்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உள்ளது.

÷இந்த களத்தில் விவசாயிகள், நெல் ஈரப்பதமாக இருந்தால் உலர்த்திக் கொள்ளலாம். ஆனால் இந்த களத்தில் நெல் உலர்த்தும் விவசாயிகளிடம் மூட்டைக்கு ரூ.20 என கட்டாய வசூல் செய்கின்றனர்.

ஒழுங்கு முறை விற்பனைக்கூட நிர்வாகமும் இதைக் கண்டும் காணாமலும் இருப்பதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

கடந்த இரு நாள்களுக்கு முன் செஞ்சி வட்டம் காரை கிராமத்தை சேர்ந்த விவசாயி பூங்காவனம் என்பவர் 11 நெல் மூட்டைகளை விற்பனைக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்து வந்தார்.

மழையின் காரணமாக தற்போது வரத்து குறைவாக இருந்ததால் நெல் மூட்டைகள் கொள்முதலை ஒரு நாள் தள்ளி வைத்தது நிர்வாகம். இந்நிலையில் விவசாயி பூங்காவனம் தான் கொண்டுவந்த 11 நெல் மூட்டைகளையும் பிரித்து உலர்களத்தில் பரப்பி காய வைத்தார்.

அப்போது அங்குள்ள சுமை தூக்கும் தொழிலாளர்கள், ஒரு மூட்டைக்கு ரூ.20 என கணக்கிட்டு மீண்டும் மூட்டையில் நெல்லை வாரி தைப்பதற்கு உள்ளிட்டவற்றிற்கு ரூ.250ஐ வலுக்கட்டாயமாக வசூலித்து விட்டதாகக் கூறினார்.

இது குறித்து நிர்வாகத்தில் முறையிட்டும் எவ்வித பயனும் இல்லை என தெரிவித்தார்.

இதேபோல் தொடர்ந்து விவசாயிகளிடம் கட்டாய வசூல் செய்யும் நபர்களை கண்டறிந்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தாட்கோ கடனுதவி பெற நேர்காணல்

தொழில் தொடங்குவதற்காக தாட்கோ வாயிலாகக் கடனுதவி பெற ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தவர்களுக்கு நேர்காணல் கள்ளக்குறிச்சியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

தாட்கோ மாவட்ட மேலாளர் முரளிதரன் தலைமை வகித்தார். இந்தியன் வங்கியின் முன்னோடி வங்கி மேலாளர் பாலச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

தொழில் தொடங்குவதற்காக ஆன் லைன் மூலம் விண்ணப்பித்த இளைஞர்களின் ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடம், குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது.

## ரபி முன்பருவ விழிப்புணர்வு முகாம்

சேத்துப்பட்டை அடுத்த நம்பேடு ஊராட்சியில் வேளாண்மைத் துறை சார்பில் ரபி முன்பருவ விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமில் திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சர்க்கரவர்த்தி, திருந்திய நெல் சாகுபடி, கரும்பு சாகுபடி, பயறு வகை சாகுபடிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் அதற்கான அரசு மானியங்கள் குறித்தும் தெரிவித்தார்.

பயிர் சாகுபடியோடு காய்கறி, பழ மரங்கள் வளர்த்தல், கறவை மாடு, ஆடு, நாட்டுக்கோழி வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல் குறித்தும் அவர் விளக்கினார். சேத்துப்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை, உதவி வேளாண்மை அலுவலர்கள் சதீஷ்குமார், முருகன், பாபு மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

17.11.2012 A.M

## மிளகு ஏற்றுமதியில் இந்தியா பின்னடைவு



கொச்சி: சர்வதேச சந்தையில், இந்திய மிளகின் விலை அதிகமாக உள்ளதால், மற்ற நாடுகளோடு போட்டியிட முடியாத நிலை உள்ளது. இதனால், சென்ற ஆண்டு, சர்வதேச மிளகு ஏற்றுமதியில், நான்காவது இடத்தில் இருந்த, இந்தியா, நடப்பாண்டில், ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்படும் என, சர்வதேச மிளகு உற்பத்தியாளர் கூட்டமைப்பு (ஐ.பி.சி.,) மதிப்பிட்டுள்ளது.சர்வதேச அளவில், மிளகு உற்பத்தி மற்றும் பயன்பாட்டில், இந்தியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டுள்ளது. நடப்பு 2012ம் ஆண்டில், சர்வதேச மிளகு ஏற்றுமதியில், வியட்நாம் நாட்டின் பங்களிப்பு, 1.08 லட்சம் டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இந்தோனேஷியா (53 ஆயிரம் டன்), பிரேசில் (27,500 டன்), மலேசியா (20 ஆயிரம் டன்) என்ற அளவில் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், இந்தியாவின் பங்களிப்பு, 17,500 டன் என்ற அளவில் தான் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, சர்வதேச மிளகு ஏற்றுமதியில், இந்தோனேஷியா, பிரேசில் ஆகிய நாடுகளை விஞ்சி, இந்தியா முன்னணியில் இருந்தது.

சர்வதேச அளவில், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்திய மிளகின் விலை, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அதிகமாக உள்ளது. இந்தியாவின் பாரம்பரிய சந்தைகளான, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுக்கான மிளகு ஏற்றுமதியும் குறைந்துள்ளது.நடப்பாண்டில், அக்டோபர் வரையிலுமாக, இந்தியாவின் மிளகு ஏற்றுமதி, 16

ஆயிரம் டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின், இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (20 ஆயிரம் டன்) விட, 16 சதவீதம் குறைவாகும்.அதேசமயம், வியட்நாம் நாட்டின், மிளகு ஏற்றுமதி, 1.02 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது.

## இந்திய கயிறு பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக மவுசு



புதுடில்லி: இந்திய கயிறு பொருட்களுக்கு, வெளிநாடுகளில் இதவை அதிகரித்து வருகிறது. இதையடுத்து, நடப்பு நிதியாண்டில், நாட்டின், கயிறு பொருட்கள் ஏற்றுமதி, 1,500 கோடி ரூபாயை எட்டும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், 1,050 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது என, கயிறு வாரியம் தெரிவித்துள்ளது.இந்தியாவின் கயிறு பொருட்கள் ஏற்றுமதியில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் பங்களிப்பு, 72 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், கயிறு பொருட்கள் ஏற்றுமதி, 600 கோடி ரூபாயாக உள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை தவிர்த்து, இந்திய கயிறு பொருட்களுக்கு, லத்தீன் அமெரிக்கா, ரஷ்யா, ஆப்ரிக்கா போன்ற நாடுகளிலும், நல்ல அளவில் வரவேற்பு காணப்படுகிறது.மேலும், நடப்பு நிதியாண்டின், இரண்டாவது ஆறு மாத காலத்தில், மேற்கண்ட நாடுகளில் இருந்து, இந்திய கயிறு பொருட்கள் வர்த்தகர்களுக்கு, அதிக அளவில் ஆர்டர்கள் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில், கேரளா, தமிழகம் மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில், அதிக அளவில் தேங்காய் உற்பத்தியாகிறது. தேங்காய் நாரிலிருந்து, உருவாக்கப்படும் கயிறுகளில் இருந்து, ரப்பர் மிதியடி, மண் அரிமானத்தை தடுக்கும் தரை விரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட

பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.குடிசை தொழிலான, கயிறு தொழிலில், உள்நாட்டில், ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக கொப்பரை வரத்தால் தேங்காய் எண்ணெய் விலை சரியும்



திருச்சூர்: தென் மாநிலங்களில் கொப்பரை வரத்து அதிகரித்துள்ளதால், தேங்காய் எண்ணெய் விலை சரிவடையும் என, வியாபாரிகள் தெரிவித்துஉள்ளனர்.நாட்டில், தேங்காய் உற்பத்தியில் கேரளா முதலிடத்தில் உள்ளது. இங்கு, 10.20 லட்சம் ஹெக்டேரில், 591 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இரண்டாவது இடத்தில் உள்ள தமிழகத்தில், 3.20 லட்சம் ஹெக்டேரில், 371 கோடி தேங்காய்கள் விளைகின்றன. அடுத்த இடங்களில், கர்நாடகா (2.87 லட்சம் ஹெக்டேர்/149 கோடி தேங்காய்கள்) மற்றும் ஆந்திரா 95 ஆயிரம் ஹெக்டேர்/ 78 கோடி தேங்காய்கள்) ஆகியவை உள்ளன.நாட்டின் ஒட்டுமொத்த தேங்காய் உற்பத்தியில், மேற்கண்ட நான்கு தென்மாநிலங்களின் பங்களிப்பு, 90.8 சதவீதமாக உள்ளது.இந்நிலையில், இந்தோனேஷியா மற்றும் மலேசியாவில் பாமாயில் உற்பத்தி அதிகரிப்பால், அதன் விலை, 21 சதவீதம் குறைந்துள்ளது. இதனால், இந்நாடுகளில் இருந்து இந்தியா மேற்கொண்டு வரும் சமையல் எண்ணெய் இறக்குமதி மெல்ல அதிகரித்து வருகிறது.கேரளாவை பொறுத்தவரை, தேங்காய் எண்ணெய்க்கான தேவை குறைந்து, அதற்கு மாற்றாக உள்ள, எண்ணெய் பனை,கொட்டையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால், தேங்காய் எண்ணெய் விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுஉள்ளது.

திருச்சூர் சந்தையில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 60 ரூபாயாக உள்ளது. அதே சமயம், காங்கேயத்தில் இருந்து திருச்சூருக்கு கிலோ 57-58 ரூபாய்க்கு, தேங்காய் எண்ணெய் சப்ளை செய்யப்படுகிறது.ஒரு கிலோ பாமாயில், 59 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ

பனங்கொட்டை எண்ணெய், 47 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், பண்டிகை காலத்திலும், தேங்காய் எண்ணெய்க்கான தேவை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.மலேசியா மற்றும் இந்தோனேஷியாவில் இருந்து விலை குறைந்த பாமாயில் இறக்குமதி அதிகரித்துஉள்ளதால், வரும் வாரங்களில் தேங்காய் எண்ணெய் விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளதாக அவர்கள் கூறினர்.நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவ.,-அக்.,), இந்தியாவின் சமையல் எண்ணெய் இறக்குமதி, நான்கு சதவீதம் உயர்ந்து, 1 கோடி டன்னுக்கும் மேலாக அதிகரிக்கும் என, எண்ணெய் உற்பத்தியாளர்கள் மதிப்பிட்டு உள்ளனர்.

## சர்வதேச மந்த நிலையால் காபி ஏற்றுமதியில் சரிவு நிலை



கொச்சி: நடப்பு 2012-13ம் நிதியாண்டில், இது வரையிலுமாக, நாட்டின் காபி ஏற்றுமதி, 10 சதவீதம் சரிவடைந்து, 1.87 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. சர்வதேச பொருளாதார மந்த நிலை, உற்பத்தி அதிகரிப்பு மற்றும் காபி விலை சரிவு போன்றவையே ஏற்றுமதி குறைந்து போனதற்கு முக்கிய காரணம்.குறிப்பாக, காபி அதிகம் விளையும், பிரேசில், கொலம்பியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில், இதன் விளைச்சல் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, சர்வதேச சந்தையில், காபி விலை குறைந்துள்ளது.

மேலும், இந்தியாவிலிருந்து, காபியை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்ளும், ஐரோப்பிய நாடுகளில், இன்னும் முழுமையான அளவில், பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இதனால், இந்திய காபி ஏற்றுமதி வெகுவாக குறைந்து போயுள்ளது என, இந்திய காபி ஏற்றுமதி கூட்டமைப்பின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.வரும் 2013ம் ஆண்டில், உலகளவில் காபி உற்பத்தி, 9 சதவீதம் அதிகரிக்கும் என, சர்வதேச காபி கூட்டமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.சர்வதேச அளவில், காபி விலை சரிவடைந்து வருவதை எடுத்துக் காட்டும் விதமாக, நியூயார்க் முன்பேர வர்த்தக சந்தையில், 2.20 டாலராக இருந்த, ஒரு பவுண்டு அராபிகா காபி, தற்போது, 4.6 சதவீதம் சரிவடைந்து, 1.46 டாலராக குறைந்து உள்ளது.இதே போன்று, லண்டன் சந்தையில், நடப்பாண்டு தொடக்கத்தில், 2,200 டாலராக அதிகரித்து காணப்பட்ட, ஒரு டன் ரோபஸ்டா காபி விலை, தற்போது, 1,877 டாலராக குறைந்து போயுள்ளது.இந்திய காபி வாரியம்,

நடப்பு 2012-13ம் நிதியாண்டில், 3.25 லட்சம் டன் காபி உற்பத்தியாகும் என, மதிப்பிட்டுள்ளது. இதில், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி, 2.21 லட்சம் டன்னாகவும், அராபிகா வகை காபி உற்பத்தி, 1.04 லட்சம் டன்னாகவும் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.
இருப்பினும், மேற்கண்ட மதிப்பீட்டை விட, குறைவான அளவே காபி உற்பத்தியாகும் என, இதன் உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதாவது, நடப்பு நிதியாண்டில், காபி உற்பத்தி 3 லட்சம் டன் அளவிற்கே இருக்கும். இதில், ரோபஸ்டா வகை காபியின் பங்களிப்பு, 2.10 லட்சம் டன் என்ற அளவிலும், அராபிகா வகை காபியின் பங்களிப்பு, 90 ஆயிரம் டன் என்ற அளவிலும் இருக்குமென, மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.சென்ற ஆண்டு, அராபிகா வகை காபியின் விலை, சர்வதேச அளவில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது. இதனால், நுகர்வோர்கள், மலிவு விலை ரோபஸ்டா வகை காபி பயன்பாட்டிற்கு மாறினர்.நடப்பு ஆண்டில், வியட்நாம் நாட்டில், ரோபஸ்டா காபி உற்பத்தி, முன் எப்போதும் இல்லாத வகையில், 2.50 கோடி மூட்டைகளாக (ஒரு மூட்டை= 60 கிலோ) அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, உலகளவில், ரோபஸ்டா காபி விலை மேலும் சரிவடையக்கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகளுக்குபயிற்சி முகாம்

வடமதுரை:தென்னம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ், ராபி முன்பருவ பயிற்சி முகாமில், இடுபொருட்கள் வழங்கபட்டது. பழனிச்சாமி எம்.எல். ஏ., தலைமை வகித்தார். ஒன்றிய தலைவர் அழகர்சாமி முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் ராணி வரவேற்றார். ஒன்றிய துணைத்தலைவர் ராஜசேகர், ஊராட்சி தலைவர் தனலட்சுமி, துணைதலைவர் சுப்பையா, உதவி செயற்பொறியாளர் ரத்தினசபாபதி, விதை சான்று உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன், வேளாண் அலுவலர் மாயகிருஷ்ணன் பேசினர்

## துவரை சாகுபடியில்வயல்வெளி பள்ளி

தேனி:காமாட்சிபுரம் சென்டெக்ட் விவசாய அறிவியல் மையம் சார்பில், உப்புத்துறை கிராமத்தில் துவரை சாகுபடி குறித்த வயல்வெளி பள்ளி துவக்க விழா நடந்தது. கடமலைக்குண்டு விவசாய உதவி இயக்குனர் சங்கர் துவக்கி வைத்தார். சென்டெக்ட் விவசாய அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். உழவர் வயல்வெளிப்பள்ளியின் நோக்கம், வயல் சூழல் ஆய்வு, துவரை சாகுபடியில் மகசூலை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து பேசினர். கடமலைக்குண்டு விவசாய அலுவலர் கருணாநிதி, அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் மூக்கம்மாள் முன்னிலை வகித்தனர். சென்டெக்ட் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள், மாரிமுத்து, கயல்விழி முன்னிலையில் 25 விவசாயிகள் ஐந்து குழுக்களாக பிரிந்து வயல்சூழல் ஆய்வு மேற்கொண்டனர்.

## ஊடுபயிரை விளைவிப்பதில் விவசாயிகள் ஆர்வம்

கூடலூர்:கூடலூர் பகுதியில் ஊடுபயிர் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். கூடலூர் பகுதியில் நீண்ட கால பயிரான தேயிலை காபி, ஏலம் தவிர, குறுகிய கால பலன்தரும் காய்கறி விவசாயத்திலும் விவசாயிகள் ஈடுப்பட்டு வருகின்றனர். வயல்களில் கோடையில் காய்கறிகளும், பருவ மழையில் நெல் விவசாயம் செய்து வருகின்றனர்.ஆண்டுக்கு ஆண்டு பருவமழையின் அளவு குறைந்து வருவதால், பலர் நெல் விவசாயத்துக்கு பதில், நேந்திர வாழை உற்பத்திக்கு மாறி வருகின்றனர். சிலர் வாழை நடுவே சொந்த தேவைக்காக கீரைகள், பீன்ஸ் ஊடுபயிராக பயிரிட்டு வந்தனர்.

இதில் நல்ல விளைச்சல் கிடைத்ததை தொடர்ந்து, கூடுதல் வருவாய்க்காக ஊடுபயிராக வாழைகளின் நடுவே இஞ்சி, பால்சேம்பு, சேணைகிழங்கு, மரவள்ளி கிழங்கு, கீரைகள் பயிரிட துவங்கியுள்ளனர்.இது குறித்து விவசாயி ராமு கூறுகையில்,""பருவமழை குறைவினால், போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தால், பல இடங்களில் வாழை உற்பத்தியில் விவசாயிகள் ஈடுப்பட்டு வருகின்றனர். வாழைக்கு நல்ல விலையும் கிடைத்து வந்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக வாழை விலையில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியால் நஷ்டம் ஏற்பட்டது. இதனை தவிர்க்க ஊடுபயிராக சேணை கிழங்கு, பால்சேம்பு போன்ற பயிர்களை பயிரிட்டு வருகிறோம்," என்றார்.

## உழவர் பாதுகாப்புத்திட்ட பயனாளிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவி

க.பரமத்தி: உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிகளை சேர்க்கும் பணி, க.பரமத்தி சின்னதாராபுரம் வருவாய் வட்டத்தில் தீவிரமாக நடக்கிறது.

க.பரமத்தி யூனியனில், 30 பஞ்சாயத்துகள் உள்ளன. க.பரமத்தி வருவாய் வட்டத்துக்கு உட்பட்ட குப்பம், புன்னம், அத்திப்பாளையம், முன்னூர், காருடையாம்பாளையம் உள்ளிட்ட கிராமங்கள் மற்றும் சின்னதாபுரம் வருவாய் வட்டத்துக்குட்பட்ட, ராஜபுரம், தொக்குப்பட்டி, புஞ்சைக்காளிக்குறிச்சி, தும்பிவாடி உள்ளிட்ட பகுதிகளில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளை சேர்க்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இத்திட்டத்தில் சேர்வதற்காக, க.பரமத்தி யூனியனில், 15ம்தேதி வரை, 425 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இது குறித்து வருவாய் அலுவலர்கள் கூறியதாவது:

தமிழகத்தில், கடந்தாண்டு முதல் உழவர் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 18 முதல், 65வயதுக்கு உட்பட்ட, சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர், குத்தகை விவசாயம், விவசாயக்கூலி மற்றும் விவசாயம் சார்ந்த கூலி வேலை செய்பவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.

திருமணம், மகப்பேறு, கல்வி, முதியோர், இயற்கை மரணம், விபத்து நிவாரண உதவித்தொகை,

எளிதில் குணமடையாத நோயால் பாதிக்கப்படவர்களுக்கு, பராமரிப்பு தொகை வழங்கப்படுகிறது. உதவிகளை பெறுவதற்காக, வி.ஏ.ஓ., அலுவலகங்களில் உறுப்பினர்களாக சேர்க்கும் பணி நடந்து வருகிறது.

இத்திட்டத்தில், கவின் கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டயப்படிப்பு, தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் பல தொழில்நுட்ப பயிற்சிக்காக, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு, 1,450 ரூபாயும், மாணவிக்கு, 1,950 ரூபாயும், விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவருக்கு, 1,250 ரூபாயும், மாணவிக்கு, 1,750 ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

இதே போல, இளங்கலை பட்டப்படிப்பு கவின் கலை இளங்கலை பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செலிவியர் பட்டயப்படிப்பை விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு, 2,000 ரூபாயும், மாணவிக்கு, 2,500 ரூபாயும், விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவருக்கு, 1,750 ரூபாயும், மாணவிக்கு, 2,250 ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. முதுகலை பட்டப்படிப்பு, கவின் கலை மற்றும் செலிவியர் முதுகலை பட்டப்படிப்பை, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு, 3,250 ரூபாயும், மாணவிக்கு, 3,750 ரூபாயும், விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவருக்கு, 2,250 ரூபாயும், மாணவிக்கு 2,750 ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது இது தொடர்பான பாடங்களில் இளநிலை தொழிற்கல்வியை, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு, 4,250 ரூபாயும், மாணவிக்கு, 4,750 ரூபாயும், விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவருக்கு, 2,250 ரூபாயும், மாணவிக்கு, 2,750 ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும், முதுநிலை தொழிற்கல்வியை, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு, 6,250 ரூபாயும், மாணவிக்கு, 6,750 ரூபாயும், விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவருக்கு, 4,250 ரூபாயும், மாணவிக்கு, 4,750 ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முன்பருவம் இணைப்பு முகாம் விவசாயிகளுக்கு ஆலோசனை

உடையார்பாளையம்: அட்மா திட்டத்தில் உணவு தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் ராபி முன்பருவம் இணைப்பு முகாம் நடந்தது.

உடையார்பாளையம் அருகே உள்ள காரைக்குறிச்சி பஞ்சாயத்தில், தமிழக அரசின் அட்மா திட்டத்தில் உணவு தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் ராபி (சம்பா) முன்பருவம் இணைப்பு முகாம் நடந்தது. துணை வேளாண் அலுவலர் சொக்கலிங்கம் வரவேற்றார். தா.பழூர் யூனியன் சேர்மன் ஜெயசுதா தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்தார்.

யூனியன் கவுன்சிலர் குணசீலன், பஞ்சாயத்து தலைவர் பிரசாத், வேளாண் அலுவலர் சுகந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சோழமாதேவி கிரீடு வேளாண்தொழில் நுட்ப வல்லுனர்கள்

ராஜ்கலா, மாரிமுத்து, வேளாண் பொறியியல் துறை இளநிலை உதவியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயனுள்ள கருத்துக்களை தெரிவித்தனர். ஏற்பாடுகளை அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சகாதேவன், செந்தில்குமார், ராஜா, குமரபாண்டியன், ஜோதி ஆகியோர் செய்திருந்தனர்.

பயிற்சியில் விதை நேர்த்தி செய்தல், பருவத்துக்கு ஏற்ப உரம் இடுதல், மண் பரிசோதனை செய்தல், ஊட்டச்சத்து மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டது.

## வெண்டை விலை வீழ்ச்சி விவசாயிகள் விரக்தி

மேட்டூர்: வெண்டைக்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மேட்டூர் அருகே, காவிரிகரையோரம் உள்ள ரெட்டியூர், செக்கானூர், பூலாம்பட்டி, நெருஞ்சிபேட்டை சுற்று கிராமங்களில், விவசாயிகள் வெண்டைக்காய் அதிக அளவில் சாகுபடி செய்கின்றனர்.

செக்கானூர் சுற்றுப்பகுதியில் அறுவடை செய்யப்படும் வெண்டைக்காய், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சந்தைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கிருந்து கேரளா மற்றும் வெளிமாவட்ட சந்தைகளுக்கு, கொண்டு செல்லப்படுகிறது.

அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி, தனியார் பள்ளி விடுதியில் மதியம் வழங்கும் உணவில், அதிக அளவில் வெண்டைக்காய் பயன்படுத்தப்படுகிறது. இதனால், பள்ளி நாட்களில் வெண்டைக்காய் விற்பனை அதிகமாக இருக்கும்.

மேட்டூர் காவிரி கரையோரத்தில், இரண்டு வாரங்களுக்கு முன், ஒரு கிலோ வெண்டைக்காயை வியாபாரிகள், 14 ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர்.

தீபாவளி பண்டிகையையொட்டி, பெரும்பாலான பள்ளிகளுக்கு ஐந்து நாட்கள் வரை விடுமுறை விடப்பட்டது. இதனால், வெண்டைக்காய் விற்பனை குறைந்து, விலையும் வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில், நேற்று ஒரு கிலோ, ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர்.

வெண்டைக்காய் விலை வீழ்ச்சியடைந்திருப்பது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

## காய்கறி சீசன் துவக்கம் :நாற்றுகளுக்கு கிராக்கி

ஆண்டிபட்டி:காய்கறி சீசன் துவங்கியுள்ளதால், ஆண்டிபட்டி பகுதியில் காய்கறி நாற்றுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி பகுதியில் அய்யனார்புரம், க.விலக்கு உட்பட சில பகுதிகளில் காய்கறி நாற்றுக்கள் சாகுபடி நடக்கிறது. தக்காளி, கத்தரி, மிளகாய் விதைகளை பாத்திகளில் விதைத்து பராமரிப்பு செய்த பின், சில நாட்களில் நாற்றுகளாக வளர்ந்து விடும்.

காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள், வளர்ந்த நாற்றுகளை வாங்கி தோட்டங்களில் நடவு செய்வர். தற்போது மழை சீசன் என்பதால், நாற்றுக்கள் உற்பத்தி செய்வதில் சிரமம் ஏற்படும். தொடர் மழை பெய்தால் வளர்ந்த நாற்றுக்கள் பாதிப்படையும். மதுரை, உசிலம்பட்டி, செக்கானூரணி, திண்டுக்கல், வத்தலக்குண்டு மற்றும் தேனி மாவட்டத்தின் பல கிராமங்களில் இருந்து விவசாயிகள், ஆண்டிபட்டி வந்து நாற்றுக்கள் வாங்கி செல்கின்றனர். இதனால் நாற்றுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது தரமான நாற்றுகள், பாத்தி 200 ரூபாய் வரை விலை போகிறது. நாற்றுகள் தேவைப் படும் விவசாயிகள் முன்கூட்டியே நாற்று வளர்ப்பவர்களிடம் ஆர்டர் தந்து பெற்றுச்செல்ல வேண்டும்.

**கால்நடை பாது காப்பு திட்ட முகாம்**

தேனி:மாவட்டத்தில் பத்து கிராமங்களில், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது.அதன் விபரம்: இன்று லட்சுமிபுரம், ஆண்ட்டிபட்டி மீனாட்சிபுரம், கடமலை தாழையூத்து, கம்பம் மகாராஜமெட்டு , நவம்பர் 20 ல் கடமலைகுண்டு, ராஜேந்திரா நகர், 24 ல் ஆண்டிபட்டி நாச்சியார்புரம், கம்பம் காஞ்சிமரத்துறை, 25 ல் சின்னமனூர் சுக்காங்கல்பட்டி, 27 ல் போடி விசுவாசபுரம் ஆகிய கிராமங்களில் முகாம் நடக் கிறது. கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழுநீக்கம், மலடு நீக்க சிகிச்சை, சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், சுண்டு வாத அறுவை சிகிச்சை பணிகளும், கோழி கழிச்சல் தடுப்பூசிகளும் போடப்படும். சிறந்த கால்நடைகள்,கன்றுகளுக்கு பரிசு வழங்கப்படும். விவசாயிகள் கால்நடைகளை கொண்டு வந்து முகாமில் பங்கேற்று பயன்பெறலாம்.

இன்றைய வேளாண் செய்திகள்

17.11.2012 A.M

**மேட்டூர் நீர்மட்டம் 62 அடி**



மேட்டூர்: காவிரி டெல்டா பகுதிகளில் விவசாய சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடைபெறுகிறது. இதனால், தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதனையடுத்து, கடந்த 11ம் தேதி முதல் மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை விட நீர்வரத்து குறைவாக உள்ளதால் மேட்டூர் அணை யின் நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. கடந்த 12ம் தேதி 66.39 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று மாலை நிலவரப்படி 62 அடியாக சரிந்தது. அப்போது, மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 1,384 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 12,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர் இருப்பு 26.20 டி.எம்.சி.

## நார் பொருள் ஏற்றுமதி ரூ.1,500 கோடியை தொடும்



புதுடெல்லி : நடப்பு நிதியாண்டில் தென்னை நார் பொருட்கள் ஏற்றுமதி ரூ.1,500 கோடியை தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா, ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, ரஷ்யா, ஆப்ரிக்கா ஆகிய சந்தைகளில் தென்னை நார் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனால் 2012,13ம் நிதியாண்டில் இவற்றின் ஏற்றுமதி ரூ.1,500 கோடியை எட்ட வாய்ப்பு உள்ளது என்று நார் பொருட்கள் வாரிய தலைவர் ஜி.பாலச்சந்திரன் கூறினார்.

கடந்த ஏப்ரல்,செப்டம்பர் மாத இடைவெளியில் நார் பொருட்கள் ஏற்றுமதி ரூ.600 கோடியாக இருந்தது. மொத்த நார் பொருட்கள் ஏற்றுமதியில் 72 சதவீதம் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இந்த நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டில் மேலும் பல ஆர்டர்கள் கிடைக்கும் என்று ஏற்றுமதியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## 30 லட்சம் டன் கோதுமை வெளிச்சந்தையில் விற்பனை



புதுடெல்லி : கோதுமை விலையை குறைக்கும் நோக்கத்தில் விரைவில் 30 லட்சம் டன் கோதுமை வெளி சந்தையில் மொத்த வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படும் என்று இந்திய உணவுக் கழகம் அறிவித்துள்ளது. மொத்த வாடிக்கையாளர்களுக்கு 65 லட்சம் டன் கோதுமையை டெண்டர் மூலம் விற்பனை செய்ய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு கடந்த வாரத்தில் அனுமதி வழங்கியது.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட கோதுமையில் 30 லட்சம் டன் கோதுமை உடனடியாக வழங்கப்படும் என்று இந்திய உணவுக் கழக தலைவர் சி.அமர்சிங் தெரிவித்துள்ளார். இதில் இமாசலப்பிரதேசம் போன்ற சிறிய மாநிலங்களுக்கு வாரத்துக்கு 25 ஆயிரம் டன்னும், பெரிய மாநிலங்களுக்கு அதிகபட்சமாக 1 லட்சம் டன் கோதுமையும் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்
17.11.2012 A.M

**விலை ஏற வாய்ப்பு குறைவு : அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்கவும் விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை**

விலை ஏற வாய்ப்பு குறைவாக உள்ளதால் அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்குமாறு விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது. இது குறித்து வேளாண் பல்கலைக்கழக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

உருளைக் கிழங்கு

உலக அளவில் கிழங்கு வகைப் பயிர்களில் முக்கிய பயிரான உருளைக்கிழங்கு ஏறத்தாழ 150 நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு 100 கோடிக்கும் அதிகமான மக்களால் உட்கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி ஆகும் தரமான உருளைக்கிழங்கு இலங்கை, ஐக்கிய அரபு நாடுகள், மொரீசியஸ், நேபாளம், சிங்கப்பூர், மாலத்தீவு மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மலைப் பகுதிகள்

தமிழகத்தை பொறுத்தவரை நீலகிரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் உருளைக்கிழங்கு விளைவிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கு சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களுக்கும், கேரள மாநிலத்துக்கும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் இந்திய அளவில் சிறந்து விளங்கும் விற்பனை மையம் ஆகும். தற்போது மேட்டுப்பாளையம் விற்பனை மையத்தில் 45 கிலோ கொண்ட ஒரு மூட்டை உருளைக் கிழங்கு ரூ.750 முதல் ரூ.950 வரை விற்பனை ஆகிறது.

கர்நாடக மாநிலம் ஹாசன் மற்றும் கோலார் ஆகிய பகுதிகளில் இருந்தும் இந்த சந்தைக்கு உருளைக்கிழங்கு வரத்து உள்ளது.

அறுவடை

தமிழக விவசாயிகள் கடைபோக உருளைக் கிழங்கை கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைத்து நடப்பு நவம்பர் மற்றும் வருகிற டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்ய உள்ளனர்.

இவ்வாறு அறுவடையாகும் உருளைக் கிழங்கிற்கு நல்ல விலை கிடைக்குமா, அவ்வாறு அறுவடை செய்த உருளைக் கிழங்கை உடனே விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்ற சந்தேகங்களை எழுப்பி உள்ளனர்.

விலை ஆய்வு

விவசாயிகளுக்கு விடை அளிக்கும் விதத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் தமிழகத்தின் முக்கிய உருளைக் கிழங்கு சந்தையான மேட்டுபாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 22 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது.

இதன்படி உருளைக்கிழங்கின் விலை வருகிற டிசம்பர் மற்றும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் (2013) 45 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ.750 முதல் ரூ.1,000 வரை கிடைக்கும் என கணக்கிட்டு உள்ளது. நல்ல தரமான உருளைக்கிழங்கிற்கு மேற்கூறிய அதிகபட்ச விலை கிடைக்கும். வருகிற 3 மாதங்களுக்கு விலை ஏற வாய்ப்பு குறைவு. எனவே அறுவடை செய்த உருளைக் கிழங்கை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**கால்நடைகளின் தீவனத்திற்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் 140 ஏக்கரில் பசும்புல் வளர்க்கப்பட்டு வருகிறது கால்நடை துணை இயக்குனர் தகவல்**

அரக்கோணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ராணிப்பேட்டை கால்நடை துணை இயக்குனர் டி.பி.ராஜேந்திரன் அரக்கோணம் வருகை தந்தார்.
பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

அரக்கோணம் சட்டமன்ற தொகுதியில் தக்கோலம், சேந்தமங்கலம், செய்யூர் ஆகிய 3 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் ரூ.79½ லட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டை கோட்டத்தில் 35 கால்நடை மருத்துவர்கள் உள்ளனர். 36 உதவி மருத்துவர்கள் உள்ளனர். இதில் 16 உதவி மருத்துவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். மொத்தத்தில் 236 பணியாளர்கள் இந்த மருந்தகங்களில் பணிபுரிந்து வருகிறார்கள்.

அரக்கோணத்தில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு பழுதுபார்க்கும் பணிக்காக ரூ.6 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. கால்நடைகளின் தீவனத்திற்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் 140 ஏக்கர் பரப்பளவில் பசும்புல் வளர்க்கப்பட்டு வருகிறது. கால்நடைகளுக்காக தமிழக அரசே இன்சூரன்ஸ் செய்து பயனாளிகள் பயன் அடைந்து வருகின்றனர்.
இவ்வாறு அவர் கூறினார்.